செ.வெ.எண்:98 /செப்டம்பர் /2019 நாள்: 24.09.2019

பத்திரிக்கைச் செய்தி

திருச்சி மீன்வள உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டில் நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் மீன்வளத் திட்டப்பணிகளை உபவடிநிலப்பகுதிகளில் செயல்படுத்திட களப்பணி மேற்பார்வையாளர் ஒருவர் தேர்வு செய்யப்படவுள்ளார். இளநிலை மீன்வள படிப்பு (B.F.Sc) - முதுநிலை மீன்வள படிப்பு (M.F.Sc) முதுநிலை அறிவியல் (விலங்கியல் - கடல் உயிரியல்) ஆகியவற்றில் ஏதேனும் ஒரு கல்வித் தகுதி பெற்றுள்ள நபர்கள் இப்பணியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நேர்முக தேர்வின் மூலம் நியமனம் நடைபெறும். இப்பணிக்கு மாதம் ரு.20.000/- தொகுப்பூதியமாக வழங்கப்படும். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் மீன்வள உதவி இயக்குநர், எண் 4 காயிதே மில்லத் தெரு, காஜாநகர், மன்னார்புரம், திருச்சி 20, (தொலைபேசி எண்: 0431 2421173) என்ற முகவரிக்கு தங்களது சுய விவரம் மற்றும் சான்றிதழ் நகல்களை கொண்ட விண்ணப்ப கடிதத்துடன் 03.10.2019 அன்று காலை 11:00 மணிக்கு மேற்காணும் முகவரியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள கெட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு:**

செ.சி 24/9/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**